முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சுப்பிரமணியர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

18.02.2019

1. யோகசித்தே அரங்கா போற்றி
யோக ஞானம் தருகின்ற தேசிகா போற்றி
வாகுடனே சுப்பிரமணியர் யானும்
வழங்கிடுவேன் அறிவுரை ஆசி தன்னை

2. தன்னிலே அரங்கமகானை நோக்கி
தவபலத்தை தேகபலத்தை தாக்க
இன்னலான சூட்சும சக்திகள் இயங்குதப்பா
இதன்வழியே அரங்கனுக்கு உணவு கொள்ள எதிர்மறை தடைகள்

3. தடைகளை எண்ணி அரங்கனும் சோர்வு கொள்ளா
தண்டாயுதன் என் மகா சக்தியை எண்ணி
தடைவெல்ல இரவு உணவுக்கு முன்னதாக
தண்ணீரில் சீரகம் குறைவாய் கொதிவைத்து

4. வைத்துமே இளஞ்சூடாய் எடுத்துபின்
வல்லமைபட அரங்கனும் பருகி பின்னே
உத்தமமாய் அரை நாழிகை பின்னே
உணவு உண்ண வேண்டும் இரவு ஆகாரமாக

5. ஆகவே சுப்பிரமணியர் யானும் அறிவுரை சொன்னேன்
அரங்கனை நோக்கி முழுமதி நாளில்
யுகமெங்கும் உள்ள உயர் சக்திகள் தேடிவருவதாலே
ஓங்காரக்குடிலில் பலம் பெறவே

6. பலம் பெறவே இந்த சூட்சுமம் சொன்னேன்
பழுதில்லா உணவு எடுத்துக் கொள்ள
பலம்கூடி அரங்கனும் முழுமதி நாளில்
பௌர்ணமியாய் மகா ஜோதியாய் ஆற்றல் பெருகி விளங்குவாரப்பா அறிவுரை ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**19.02.2019**, செவ்வாய்க்கிழமையான இன்றைய தினம், குருநாதர் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் வெளிப்பாட்டையும் தவத்தையும் கெடுத்திட, குருநாதரை அழித்திடவும், தர்மத்திற்கு எதிராகவும் உலகின் மிகப்பெரும் தீயசக்திகள் ஒன்றுகூடி குடிலை நோக்கி வருகிறது. இவற்றை தீமையான எண்ணம் கொண்ட மக்கள், விரோத தீயசக்திகளை அனுப்பி வைக்கின்றனர். அதனால் தர்மத்தின் சார்பாக உலகமகா சக்திகளும், ஞானிகளும் முருகப்பெருமான் தலைமையில் ஒன்றுகூடி அந்த தீயசக்திகளை தடுக்கின்றனர். இதுசமயம் குருநாதரின் பாதுகாப்பிற்காக அவருடைய தொண்டர்களாகிய நாம் ஒன்றுகூடி சர்வவல்லமையுள்ள சரவணஜோதி மந்திரத்தை "ஓம் சரவணஜோதியே நமோ நம" என்று ஒலித்து ஜெயகோஷமிட்டு ஆசானுக்கு நம்மால் இயன்ற அளவு பாதுகாப்பை தர வேண்டும். சரவணஜோதி மந்திரத்தை சொன்னவுடன் (குறைந்தபட்சம்

இருபத்திநான்கு முறை சொல்லி முடித்தவுடன்) ‘‘அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே, முருகா, உலகப்பெருமாற்றத்திற்காக அவதரித்துள்ள உமது அவதாரமாகிய எங்கள் குருநாதர் அரங்கரின் செயல்பாடுகளுக்கும், குருநாதரின் ஆரோக்கியத்திற்கும், தவத்திற்கும், எந்த தீய சக்திகளாலும் எந்தவிதமான இடையூறுகளும் ஏற்படாமல் காத்தருள் புரிய வேண்டுகிறோம். உமது திருவடியை மன்றாடி கேட்டுக்கொள்கிறோம். உலகமகா சக்திகளே! ஞானிகளே! எங்கள் குருநாதர் தவத்திற்கு துணையாக வாருங்கள். அருள் புரியுங்கள் எங்கள் தாயே! முருகா! வேற்படையை தாருங்கள் தாயே! எங்கள் செயல்பாட்டிற்கு பாதுகாப்பு தாருங்கள், உலகின் தருமத்தை காத்தருளுங்கள் முருகா! முருகா! முருகா!

ஆயிரக்கணக்கான மந்திரவாதிகள் துஷ்ட தேவதைகளையும், தீய ஆன்மாக்களையும் ஒருசேர ஓங்காரக்குடிலுக்கு அனுப்பினர். ஆனாலும் குடிலில் உள்ள ஒரு சின்ன நாய் குட்டியைக் கூட, அந்த மந்திர சக்திகளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. எல்லாம்வல்ல முருகப்பெருமான் தலைமையில் வேல்படை தீயசக்திகளை விரட்டிவிட்டது. அன்பர்களே தொடர்ந்து முருகப்பெருமானை பிரார்த்தனை செய்து தருமத்தை காப்பாற்றுவோம்.

–சுபம்–